**கவனிக்க.**-2022.08.12 ஆந் திகதிய 2293 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ்மொழி மூலம்)) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2294 - 2022 අගෝස්තු මස 19 වැනි සිකුරාදා - 2022.08.19

*2294 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 212 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**-(i) நீதித்துறை (திருத்தம்) சட்டமூலம் 2022, ஓகத்து மாதம் 05ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2022, ஓகத்து மாதம் 05ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2022, ஓகத்து மாதம் 05ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


211 - B 082369 - 353 (2022/06)

# நானாவித அறிவித்தல்கள்

## சுசரண லங்கா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*அசங்க நவரத்ன ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "சுசரண லங்கா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.*

*01. குறை சருமானம் பெறுவோரின் பிள்ளைகளை நோக்காகக் கொண்டு கல்விப் புலமைப்பரிசில்கள், பாடசாலை உபகரணங்களை வழங்குதல் மட்டுமல்லாது ஏனைய நன்கொடைகள் மற்றும் உதவிச் சேவைகளை அமுல்படுத்தல்.*

*02. வெளிநாட்டு கல்வி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்து இந்நாட்டு பிள்ளைகளுக்கு பலதரப்பட்ட துறைகள் ஊடாக சர்வதேச தரத்திலான அறிவு மற்றும் அனுபவங்களை வழங்குதல் மற்றும் நாடுகளுடன் அறிவுப் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.*

*03. கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் நூலக வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பிள்ளைகளிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த இலக்கு வைத்து அப் பாடசாலைகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய பௌதீக வசதிகளை வழங்குதல், இலக்கிய ஆக்கங்கள் மற்றும் பிற ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.*

*04. எதிர்கால உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்குப் பொருந்தும் வகையில் பிள்ளைகளிடம் தொழில்முயற்சிப் பண்புகள் மற்றும் திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒவ்வொரு துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களின் ஊடாக பிள்ளைகளுக்கு பயிற்ச் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்தல்.*

*பிறவும்.*

*அசங்க நவரத்ன,*
*பாராளுமன்ற உறுப்பினர்,*
*குருநாகல் மாவட்டம்.*

*08-153*

---

## கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்) அறிவித்தல்

*மல்வான, வல்கம, BEPZ, 15 ஆம் இலக்க காணித்துண்டத்தைச் சேர்ந்த லுமியர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்டின் விடயத்தில்.*

*அத்துடன்*

வழக்கிலக்கம்:
CHC/32/2022/CO
தன்மை: ஒடுக்குதல்

*லுமியர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்டின் அலுவல்களை நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கு, 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 534 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 270(உ) என்னும் பிரிவின் கீழான விண்ணப்பமொன்றின் விடயத்தில்.*

*செபெக் இன்டர்நஷனல் பிறைவேட் லிமிடெட், 180B, பென்கூலன் தெரு,*
*#12-05, த பென்கூலன்,*
*சிங்கப்பூர் (189648).*

*மனுதாரர்*

*(அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்) இலங்கையிலுள்ள கொழும்பில் நடைபெறும் மேல மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று, மேற்கூறப்பட்ட மனுதாரரின்*

சார்பில் சட்டத்தரணி ரசிக்கா வெல்லப்பிலி அவர்களினால் 2022, யூலை 28 ஆம் நாளன்று சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டதென்றும், சொல்லப்பட்ட மனு, 2022, ஒற்றோபர் 10 ஆம் நாளன்று நீதிமன்றத்தின் முன்னர் கேட்கப்படுவதற்கும் பணிக்கப்பட்டுள்ளனென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. சொல்லப்பட்ட மனுமீது கட்டளையொன்று ஆக்கப்படுவதனை ஆதரிப்பதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநர் அல்லது உதவுதொகை செலுத்துநர், அந்நோக்கத்துக்காக நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ கேட்பு நேரத்தில் தோன்றலாம்; அத்துடன் மனுவின் பிரதியொன்று அதனைத் தேவைப்படுத்துகின்ற சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு, அதற்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் மீது கீழே கையொப்பமிட்டவரினால் கொடுத்துதவப்படும்.

ரசிக்கா வெல்லப்பிலி,<br>
மனுதாரருக்கான சட்டத்தரணி,<br>
இல. 25/1/B, பெல்மென்ட் தெரு, கொழும்பு 12.

குறிப்பு : சொல்லப்பட்ட மனுவின் கேட்பின்போது தோன்றுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், அவ்வாறு செய்வதற்கான அவரது உட்கருத்துப் பற்றிய எழுத்திலான அறிவித்தலை சட்டத்தரணி ரசிக்கா வெல்லப்பிலி அவர்களுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலின் மூலம் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலானது, ஆளின் பெயரையும் முகவரியையும் அல்லது குழுமமொன்றாயின் குழுமத்தின் பெயரையும் முகரியையும் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாளினால் அல்லது அக்குழுமத்தினால் அல்லது அவரது அல்லது அவர்களது சட்டத்தரணியினால் (எவரேனுமிருப்பின்) கையொப்பமிடப்படுதலும் வேண்டும். அத்துடன் மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரை, 2022, ஒற்றோபர் 10 ஆம் நாளன்று பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் சென்றடையுமாறு அது சேர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது அஞ்சலிலிடப்படின், அந்நேரத்துக்கு முன்னர் அவரைச் சென்றடையக்கூடிய வகையில் போதிய நேர காலத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

08 - 145